DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC No. 703/2022 Crime No. 120/2022 Station Bhavani

| Name | PW-9-பிரபு | Village | |
|---|---|---|---|
| Father Name | பொன்ராஜ் | Taluk | |
| Age | 40 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 06.05.2024 |

**முதல் விசாரணை-**

**எதிரி சந்திரா ஆஜர்**

நான் தற்பொழுது கோபி மாண்பமை குற்றவியல் நீதிமன்ற எண்.1 ல் நகல் பரிசோதகராக பணிபுரிந்து வருகிறேன். பவானி மாண்பமை IV வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் இளநிலை கட்டளை பணியாளராக பணியிலிருந்தபோது கடந்த 24.03.2022 ம் தேதியன்று மாலை சுமார் 05.00-05.15 மணியளவில் நான் பவானி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திலுள்ள முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அருகிலுள்ள மாடிப்படியில் வந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற தலைமை எழுத்தரையும், மாண்பமை நீதிபதி அம்மா அவர்களையும் தகாத வார்த்தைகளால் பேசிக்கொண்டிருந்தார். நான் அவரிடம் நீதிமன்ற வளாகத்தில் இவ்வாறெல்லாம் சத்தம் போடக்கூடாது என்று கூறினேன். அதற்குள் நீதிபதி அம்மாவும் மற்றும் தலைமை எழுத்தரும் அங்கு வந்துவிட்டனர். நீதிபதி அம்மா அங்கிருந்த நீதிமன்ற ஊழியர்களிடம் நீதிமன்ற காவலர்களை அழைக்குமாறு கூறினார். பின்னர் காவலர்கள் வந்து ஆஜர் எதிரியை அழைத்து சென்றுவிட்டனர். பின்னர் அன்றைய தினம் மாலையில் சம்பவயிடத்திற்கு வந்த போலீசார் சம்பவம் குறித்து விசாரித்து, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள். பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டுக்கொண்டதால் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் எதிரியால் குறுக்கு விசாரண**

அ.சா.1 பணிபுரியும் அறைக்கும், நான் பணிபுரியும் இடத்திற்கும் இடையே சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும். எதிரி, அ.சா.1 ஐ திட்டியதாக சொல்லப்படும் நேரம் மாலை 05.00 முதல் 05.15 வரையிருக்கும். முதல் தகவல் அறிக்கையை நான் பார்க்கவில்லை. அ.சா.1 தலைமை எழுத்தர் திருமதி. சாந்தி அவர்கள் அறையில் சிசிடிவி கேமிரா உள்ளது. போலீசார் தயார் செய்த பார்வை மகசர் தயாரிக்கப்பட்ட நேரம் தெரியுமா என்றால், தற்பொழுது நியாபகம் இல்லை. மாலை நேரமாகும். சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து இன்று காலை எனக்கு சம்மன் வந்தது. அ.சா.ஆ.2 பார்வை மகசரிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப் பார்த்துதான் கையொப்பம்

செய்தேன். பார்வை மகசர் தயார் செய்யும்பொழுது நான் அந்த வழியாக சென்றேன். வேறு யாரையும் நான் பார்க்கவில்லை. எனக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால், சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.